**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAHILA COURT / ADDITIONAL SPECIAL COURT FOR EXCLUSIVE TRIAL OF CASES UNDER POCSO ACT,COIMBATORE.

S.C.No.168 of 2022

Prosecution witness - 2

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-2 பவித்ராதேவி | Caste | |
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.10.2023.

(எதிரி ஆஜர்.)

**முதல் விசாரணை-**

நான் தற்போது திருப்பூர், பொங்கலூர் அஞ்சல், கதவுஎண் 7/700, சக்தி நகரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய நாத்தனார் அன்னபூரணியின் மருமகன், அ.சா.1 கார்த்திகேயன் என்னுடைய நாத்தனார் அன்னபூரணியின் மகன். என்னுடைய நாத்தனார் அன்னபூரணி, அவருடைய கணவர் அன்பரசுக்கும் ஒரு பையன், ஒரு பொண்ணு. அந்த பொண்ணு பெயர் சரண்யா. அவள் தான் மூத்தவள். எனக்கு நாத்தனாரும், அவருடைய கணவரும் இறந்த வருடம் சரியாக ஞாபகமில்லை, ஆனால் சரண்யாவின் கல்யாணத்திற்கு முன்பே இருவரும் இறந்துவிட்டார்கள். என்னுடைய நாத்தனாரும், அவருடைய கணவரும் உயிரோடு இல்லாததால் நானும், என் கணவர் சக்திவேலும் முன்நின்று சரண்யாவுக்கு திருமணம் செய்து வைத்தோம். 20.05.2015 அன்று அவினாசி ஈஸ்வரன் கோவிலில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்திற்கு 17 பவுன் நகையும், சீர்வரிசையாக திருமணத்திற்கு முன்பாகவே கட்டில், பீரோ, ஒரு சேர் கொண்டு போய் மாப்பிள்ளை வீட்டில் வைத்துவிட்டு வந்தோம். கல்யாணத்திற்கு முன்பு எதிரியும், சரண்யாவும் போனில் நன்றாக பேசிக்கொண்டு தான் இருந்தார்கள். நான் கல்யாண வேலை காரணமாக சரண்யா வீட்டிற்கு அவ்வப்போது போகும்போதெல்லாம் எதிரி நன்றாக போனில் பேசுவதாகவும், தன்னை திருமணம் செய்து கொண்டால் நன்றாக பார்த்துக கொள்வார் என்று சரண்யா என்னிடம்

சொல்லியிருக்கிறாள். கல்யாணம் முடிந்து மறுவீட்டு அழைப்புக்கு செல்லும்போது என்னிடம் கல்யாணத்துக்கு முன்னாடி இருந்தமாதிரி எதிரியும், எதிரி வீட்டாரும் இல்லை என்றும், ஒருவருக்கொருவர் சரியாக பேசிக்கொள்வதில்லை என்றும் சொன்னாள். ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு மாதிரி இருக்கும், கல்யாணம் ஆனால் எல்லாம் சரியாகிவிடும் என்று நான் அட்வைஸ் சொன்னேன். கல்யாணம் முடிந்து தாய்மாமன் வீட்டிற்கு விருந்துக்கு கூப்பிட்டபோது மாப்பிள்ளை வரவே இல்லை, சரண்யாவை மட்டும் கழுவேரிபாளையம் கொண்டு வந்துவிட்டுவிட்டார். எங்க வீட்டில் விருந்துக்கு செய்தது எல்லாம் மாப்பிள்ளை வராததால் அப்படியே வைத்துவிட்டு சரண்யா கழுவேரிபாளையத்தில் இருப்பதால் நான் அங்கு சென்றுவிட்டேன். அப்போது எதிரி அங்கு வந்தார். ஏன் விருந்துக்கு வர்றேன்னு சொல்லிட்டு வரலை, எங்ககிட்டல்லாம் போன்ல எல்லாம் பேசமாட்டேங்கிறீங்க, தாய், தகப்பன் இல்லாத புள்ளய உங்களை நம்பி கொடுத்திருக்கிறோம்ல, நாங்க தான் அவளை பார்த்துக்கணும் என்று ஆஜர் எதிரியிடம் கேட்டேன். நான் வேலையில் இருந்ததால் போனை எடுக்கவில்லை என்று ஆஜர் எதிரி சொன்னார். உடனே ஆஜர் எதிரியும், சரண்யாவும் வீட்டிற்கு கிளம்பி வந்தார்கள். மீண்டும் சிம்பிள்-ஆக ஒரு சாப்பாடு செய்து மணமக்களுக்கு கொடுத்தோம். இரவு அங்கேயே தங்கினார்கள். காலையில் 6.00 மணிக்கெல்ாம் சரண்யா எழுந்து எதிரி இப்பவே கிளம்ப வேண்டும் என்று சொல்கிறார். எனக்கு டிபனும் வேண்டாம், நான் போகவில்லை என்றால் என் வாழ்க்கை வீணாகிவிடும் அத்தைஎன்று ெசல்லி உடனே மாப்பிள்ளையோடு கிளம்பிவிட்டாள். அப்போது நான் ஆஜர் எதிரியிடம் சரண்யாவை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள், உங்களுக்குள் ஏதாவது பிரச்சனை என்றால் எனக்கு தகவல் கொடுங்கள், நான் உடனே அந்த இடத்திற்கு வந்து நிற்பேன் என்று சொல்லிதான் சரண்யாவை எதிரியோடு அனுப்பி வைத்தேன். அதன்பிறகு சரண்யாவிடம் எதிரி எங்க வீட்டு ஆட்கள் போனில் கூப்பிட்டால் எடுக்கக்கூடாது என்று சொன்னதால் நாங்கள் சரண்யாவிற்கு போன் செய்வதை நிறுத்திவிட்டோம். ஆனால் அ.சா.1 கார்த்திகேயனிடம் மட்டும் நான் தினந்தோறும் இரண்டு முறை, மூன்று முறை அக்காவிடம் பேசு, அக்கா பொக்குனு போய்விடுவாள் என்று சொல்லியிருந்தேன். இதற்கிடையில் அ.சா.1 கார்த்திகேயனிடம் நான் சீட் கிடைக்கவில்லை என்றால் காலேஜ்-ல் நேரில் சென்று விசாரி என்று சொன்னேன். எதிரி ஜீவானந்தம் கற்பகம்

காலேஜ்-ல் வேலை பார்க்கிறார் என்று தான் சொல்லி திருமணம் செய்து கொண்டார். அதை சொல்லித்தான் ரூ.50000/- கட்டினால் போதும் என்று அ.சா.1 கார்த்திகேயன் சொன்னதாகவும், அதற்கு அ.சா.1 கார்த்திகேயன் பணம் கொடுத்ததாகவும், ஆனால் காலேஜ்-லிருந்து எந்த ஒரு லட்டரும் வரவில்லை என்று அ.சா.1 கார்த்திகேயன் சொன்னார். அதனால் தான் அ.சா.1 கார்த்திகேயனை காலேஜ்-க்கு நேரில் சென்று விசாரி என்று சொன்னேன். அங்கு போய் விசாரித்த அ.சா.1 கார்த்திகேயன் எனக்கு போன் செய்து காலேஜ்-ல் எனக்காக 50000/- டோக்கன் யாரும் கட்டவில்லை என்றும், ஜீவானந்தம் என்ற நபரே அங்கு வேலை செய்யவில்லை என்றும் காலேஜ்-ல் சொன்னதாக என்னிடம் பதறிக்கொண்டு அ.சா.1 சொன்னார். இந்த விஷயத்தை அ.சா.1 கார்த்திகேயன், சரண்யாவிடம் சொன்னபோது, சரண்யா அதற்கு எனக்கும் எதிரியை பார்த்தால் தப்பாகத்தான் தோணுகிறது, அவர் பீரோ சாவியை யெல்லாம் தொலைக்கவில்லை. நகையை அடமானம் வைத்திருக்கிறார் என்று சரண்யா, அ.சா.1 கார்த்திகேயனிடம் சொல்லியிருக்கிறார். அதன்பிறகு என் கணவர் வேலைக்கு போய்விட்டார். நானும், அ.சா.1 கார்த்திகேயனும், சரண்யாவை திருமணம் செய்து கொடுத்த வாகராயம்பாளையத்திற்கு சென்று, மாமியார், மாமனாரிடமும் என்ன ஆச்சு, உங்க பையன் வேலைக்கு போறாரா இல்லையா, நகை எல்லாம் என்ன ஆனது என்று கேட்டோம். அப்போது சரண்யாவின் மாமியார், அவன் எப்போது வீட்டிற்கு வருகிறான், எப்போது போகிறான் என்று எனக்கு தெரியாது என்று சொன்னார். அப்போது நான் சரண்யா ஒன்னும் காதல் திருமணம் செய்து கொள்ளவில்லை. நீங்கள் வந்து பெண் கேட்டதால் தான் நாங்கள் திருமணம் செய்து கொடுத்தோம். நீங்கள் தான் பொறுப்பு என்று சொன்னேன். ஜீவா வராமல் நாங்கள் வீட்டை விட்டு போகமாட்டோம். அவர் என்ன கலெக்டர் வேலைக்கு போகிறாரா என்று திட்டினேன். நாங்க வந்தோம், பொண்ணு கேட்டோம், ஆனால் பொண்ணு தற்போது உங்களுக்கு உயிரோடு வேணும்னா பொண்ணை கூட்டிட்டு போயிடுங்க என்று சொன்னார். நாங்க அங்கு இருக்கிற சூழ்நிலையை பார்த்தால் மாமனார், மாமியார் சரண்யாவோடு இணக்கமாக இல்லை, பேசுவது இல்லை என்று தான் தோன்றியது. மாமனார், மாமியாரோ ஒருவருக்கொருவர் சுமூகமாக இல்லை என்பதும் தெரிய வந்தது. நாங்கள் ஆஜர் எதிரி ஜீவா-வை பற்றி சொல்லிக்கொண்டிருக்கும்போது சரண்யா மாமனார், மாமியாரை அடித்தார். இதனால் புள்ளய இங்க வைத்திருக்கக்கூடாது

என்று சரண்யாவை நாங்கள் கழுவேரிபாளையத்திற்கே அழைத்து வந்துவிட்டோம். சரண்யா அப்போது என்னிடம் எதிரி தன்னிடம் சரியாக பேசுவதில்லை என்றும், ஏன் என்று கேட்டபோது உன்னை நான் குப்பை மாதிரி வைச்சிருக்கையிலே நீ இப்படி இருக்க, எல்லாரும் மாதிரி வைச்சிருந்தா நீ எப்படி இருப்ப என்று எதிரி சொன்னதாகவும், சுடிதார் போன்ற உடைகளை அணியக்கூடாது என்று சொன்னதாகவும் சரண்யா என்னிடம் சொன்னாள். 2,3 நாட்கள் நான் என்னுடைய வீட்டிற்கு கூட்டிட்டு போய் சில பொருட்களை purchase செய்வது என்று அவளை கொஞ்சம் மனம் நிம்மதியாக இருக்கும்படி செய்தேன். அதன்பிறகு எதிரி சரண்யாவுக்கு போன் செய்து பேச ஆரம்பித்துவிட்டார். அவருடைய போனை அடிக்கடி அட்டெண்ட் செய்த சரண்யா நான் கழுவேரிபாளையம் தோட்டத்திலிருந்து வந்து 2,3 நாட்கள் ஆகிறது, தம்பி தனியாக இருப்பேன், நான் போகிறேன் அத்தை என்று சொல்லி கிளம்பிவிட்டாள். கழுவேரி பாளையத்தில் சரண்யா இருந்தபோது ஆஜர் எதிரி தொடர்ந்து போனில் பேசி நகைகளை திருப்பி தருவதாகவும், வேலைக்கு போவதாகவும், சொல்றார், ஒரு முறை அவருக்கு நான் வாய்ப்பு கொடுக்கிறேன் அத்தை என்று என்னிடம் சொன்னாள். என்னுடைய வாழ்க்கை, எந்த பிரச்சனையாக இருந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று என்னிடம் சொல்லிவிட்டு கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டாள். அங்கு போனபிறகு நாங்கள் போன் செய்யக்கூடாது என்று அ.சா.1 கார்த்திகேயன் தான் அவ்வப்போது போன் செய்து கொண்டிருந்தார். 30.12.2015 அன்று நேரம் தெரியவில்லை, சாயங்காலம், அ.சா.1 கார்த்தி கேயன் போன் செய்து, சரண்யாவிற்கு போன் செய்தபோது பக்கத்து வீட்டுக்காரர்தான் போன் எடுத்தாகவும், சரண்யாவை ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போவதாகவும் சொன்னதாக என்னிடம் சொன்னார். உடனே கிளம்பி வாங்க என்று சொன்னதால் நாங்க எல்லாரும் பல்லடம் போய்விட்டோம். அ.சா.1 கார்த்திகேயனும் பல்லடம் வந்துவிட்டார். கார்த்திகேயனும், பக்கத்து தோட்டத்துக்காரர்களும் 4,5 காரில் பல்லடம் வந்துவிட்டார்கள். நான் போகும்வழியில் ஆஜர் எதிரிக்கு போன் செய்தபோது ஆஜர் எதிரி ஒரு முறை மட்டும் போனை எடுத்து சரண்யா தூக்கு மாட்டிக்கிட்டாங்க என்று சொன்னார். நான் என்ன ஆச்சு என்று கேட்பதற்குள்ளேயே போனை வைத்துவிட்டார். அதன்பிறகு ஆஜர் எதிரி போனை எடுக்கவே இல்லை. கூட வந்தவங்க ஏதோ தப்பா இருக்கு, முதல்ல போலீசுக்கு தகவல் கொடுங்க என்று

சொன்னார்கள். உடனே நாங்கள் கருமத்தம்பட்டி காவல் நிலையத்திற்கு போனில் தகவல் சொன்னோம். நாங்கள் பாப்பம்பட்டி போகும்வழியிலேயே ஊருக்கு 1கி.மீ முன்னாடி போலீசார் எங்களை குறுக்காட்டி பாடியை நாங்கள் எடுத்து வந்துவிட்டோம். பாடியை முன்னாடி ஆம்புலன்ஸில் சி.எம்.சி. மருத்துவமனைக்கு எடுத்துக்கொண்டு போறோம். நீங்க போய் ஸ்டேசனில் ஒரு புகார் கொடுத்துவிட்டு கோயமுத்தூர் ஜி.கெச்.க்கு வாங்க என்று சொல்லிவிட்டார்கள். நான், எங்க வீட்டுக்காரர் எல்லாம் அது எப்படி தூக்கு போட்டுக்கும், எங்க புள்ளய நாங்க பார்க்கணும்என்று சொன்னோம். நாங்கள் எதிரியின் வீட்டிற்கு போகும்போது எதிரியோ, எதிரியின் பெற்றோர்களோ அங்கு இல்லை. ஊரே கூடி நின்றது. உள்ளே போனபோது ஒரு பெண் போலீஸ் வீட்டிற்குள் இருக்கும் ஒரு பேனை காண்பித்து இதில் தான் சரண்யா தூக்கு போட்டுக் கொண்டாள், இந்த துப்பட்டாவில் தான் தூக்கு போட்டுக் கொண்டாள் என்று ஒரு துப்பட்டாவை காண்பித்தார்கள். அந்த இருட்டில் அப்போதைய சூழ்நிலையில் வெளியில் கேட்கும் அலறல் சத்தம் ஆகியவற்றால் என்னால் துப்பட்டாவின் கலரை கூர்ந்து கவனிக்க முடியவில்லை. என்னிடம் காட்டப்படும் துப்பட்டா கலரில் சரண்யாவிடம் ஒரு சுடிதார் இருந்தது. எங்களுடைய பண்டார வகுப்பில் ஒரு நபர் இறந்துவிட்டால் பங்காளிகள் தேங்காய், பழம் உடைத்து வைத்து இறந்தவருக்கு சாமி கும்பிடுவோம், அது போன்ற சடங்குகள் பண்ணியிருப்பார்கள் போலத் தெரிகிறது. தேங்காய் உடைத்து வைத்திருந்ததை பார்த்தேன். தேங்காய், பழம் வைத்திருந்தார்கள். சாமி படம் எல்லாம் திருப்பி வைக்கப்பட்டிருந்தது. போலீசார் ரொம்ப நேரம் ஆளாளுக்கு சத்தம் போடாதீங்க அப்படின்னு சொல்லிட்டு கருமத்தம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு புகார் அளிக்கு கூட்டி வந்துவிட்டார்கள். அ.சா.1 கார்த்திகேயன் தான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னால் அந்த டைம்ல எதையும் சரியாக கவனிதது கொள்ள முடியவில்லை. என்னிடமும், என் கணவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். காவல் நிலையத்தில் தான் இதை சொன்னேன். காலையில் ஆர்.டி.ஓ. அம்மா என்னை விசாரணை செய்தார்கள். அந்த வாக்குமூலம் **அ.சா.ஆ.3.** அப்போது ஒரு லேடி போலீஸ் போஸ்ட்மார்டம் முடியும் நிலையில் உள்ளது, பாடியை வாங்கிக்கோங்க என்று சொன்னார். நான் சவத்தை பார்க்கவே

இல்லை, சவத்தில் காயங்கள் இருந்ததாக உறவுக்காரர்கள் சொல்கிறார்கள், அதற்குள் எதற்கு போஸ்ட்மார்டம் செய்தீர்கள் என்று கேட்டேன். நீங்க 100 பேர் சொந்த பந்தம் ஆஸ்பத்திரி முன் கூடியிருக்கீங்க, சவத்தை கொடுக்கிறோம், வாங்கி கொண்டுபோய் அமைதியாய் அடக்கம் பண்ணுங்க, கோர்ட்டுக்கு case வரும், அப்போது நீங்க போட்ட நகை நட்டு, சீர் சாமான்கள் ஆகியவற்றை சொல்லி பெற்றுக் கொள்ளுங்கள், அதை வாங்கிக் கொடுப்பது எங்கள் வேலை அல்ல என்று போலீஸ்காரர்கள் சொன்னார்கள். போலீஸ்காரர்கள் சொன்னதன் பேரில்சவத்தை நாங்கள் பெற்றுக் கொண்டோம். நாங்கள் சவத்தை வாங்கியவுடன் சரண்யாவின் பூர்வீகமான கழுவேரிபாளையத்திற்கு எடுத்து சென்று இறுதி சடங்கு எல்லாம் நானும், அ.சா.1 கார்த்திகேயனும் செய்து புதைத்துவிட்டோம். இதில் என்ன கொடுமை என்றால் எதிரிக்கு இரண்டு அக்காக்கள் இருந்தும், தாய், தகப்பன் இருந்தும், பெரிய குடும்பமாக இருந்து பொண்ணு கேட்டு கட்டிட்டு போய் சரண்யா இறந்தபிறகு ஒரு நபர் கூட வந்து போஸ்ட்மார்டம் செய்யும் போதோ, சவத்தை வாங்கும்போதோ, இறுதி சடங்கிலோ கலந்து கொள்ளவில்லை. சரண்யா ரொம்ப தைரியமான பொண்ணு. அவள் தற்கொலை செய்வதற்கு வாய்ப்பே இல்லை. சரண்யாவின் அப்பா இறக்கும்போது அந்த பொண்ணுக்கு வயது 15 தான், அவ்வளவு தைரியமாக தோட்டத்தில் வைத்துக கொண்டு தன் தாய்க்கு ஆதரவாக நின்றவள். படித்த பொண்ணு, வேலைக்கு போனவள். திருமண வாழ்க்கையை நன்றாக வாழ வேண்டும் என்ற கனவோடு கணவன் வீட்டிற்கு சென்றவள். சரண்யாவின் தாத்தா ஓய்வு பெற்ற இடைநிலை ஆசிரியர். சரண்யாவின் அப்பா போஸ்ட் மாஸ்டராக இருந்தவர். சரண்யாவின் அம்மாச்சி ஓய்வு பெற்ற சத்துணவு ஆயா. நல்ல குடும்ப சூழ்நிலையில் வளர்ந்தவள். குடும்பத்தை நன்றாக பார்த்துக்கொண்டு விவசாயம், மாடு வளர்ப்பு, எல்லாவற்றையும் அவள் தான் நிர்வாகம் செய்து கொண்டு அ.சா.1 கார்த்திகேயனையும் நங்கையார் இறந்தபிறகு அவள் தான் வளர்த்தினாள். ஆஜர் எதிரி ஜீவானந்தம் திட்டம் போட்டே பெற்றோர் இல்லாத பொண், தோட்டம் காடு இருப்பது தெரிந்தே திருமணம் செய்து ஏமாற்றிவிட்டார். கல்யாணத்திற்கு முன்பு ஜீவானந்தம் சரண்யாவோடு நன்றாக பேசிவிட்டு கல்யாணம் முடிந்த ஒரு நாளிலேயே உங்க அம்மாவுக்கு வருஷாந்திரம் முடிந்தால்தான் உன்னோடு கணவனாக வாழ்வேன் என்று சொல்லியிருக்கிறார். இந்த வழக்கு சரண்யா இறந்து

7,8 வருடங்களுக்கு பிறகு தான் விசாரணைக்கு வந்துள்ளது, இந்த இடைப்பட்ட காலத்தில் ஆஜர் எதிரி பல நபர்களை இடைத்தரகர்களாக வைத்து case ஐ வாபஸ் செய்யும்படி பேசியிருக்கிறார். அ.சா.1 கார்த்திகேயன் சரண்யா இறக்கும்போது சின்ன பையன், அதனால் தோட்டத்தில் இருக்க வேண்டாம், பல்லடத்தில் வந்து இரு என்று சொன்னோம்.

**குறுக்கு விசாரணை -**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை, குறுக்கு விசாரணை இல்லை.

2023 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 17 ம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

சாட்சியின் கையொப்பம்

"என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

அமர்வு நீதிபதி,
மகிளா கோர்ட் / கூடுதல் சிறப்பு நீதிமன்றம்
(பாலியல் வன்முறையிலிருந்து குழந்தைகளை
பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் விசாரிக்கும்
சிறப்பு நீதிமன்றம்), கோயமுத்தூர்.